1990 மே 7]

திற்குத் தூசி மாமண்டூர் ஏரியைத் தூர் வாரி, கால்வாய் களை நவீனப்படுத்த பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே அந்த நேரத்தில் ஏழாச்சேரியினுடைய வரத்துக் கால்வாயும் கவனிக்கப்படும்.

புதியசாலைஅமைத்தல்.

* 3840—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், மேலராமநதியிலிருந்து ப. மூலக்கரைப்பட்டி கிராம சாலைத் திட்டத்தில் புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கிராமச் சாலைகள் திட்ட ஏழாம் கட்ட ஒருங் கிணைந்த பணிகளில் ரூ. 80.00 கோடி திட்டத்தில் இந்தச் சாலைப்பணி இடம் பெற்றுள்ளது. நிதி நிலைமைக்கேற்ப வருங்காலத்தில் அரசின் நிர் வாக ஒப்புதல் பெற்று இந்தச் சாலைப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

9-20 மணி

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, மேல ராமநதியிலிருந்து மூலக்கரைப்பட்டி கிராம சாலையினுடைய திட்டத்திலே, மேலராமநதியிலே 1,800 மக்கள் தொகைக்கு மேலாகவிருக்கிறது. மூலக்கரைப் பட்டி என்ற கிராமத்திலே 2,500 மக்கள் தொகைக்கு மேலாக விருக்கிறது. தூரமும் 4 கி.மீ. தான் இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு ஊர்களையும் இணைக்கின்ற இந்தக் கிராம சாலைத் திட்டத்திலே இந்த ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை நிறை வேற்ற அரசும் அமைச்சரும் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன், இந்த மேலராமநதி 'டு' மூலக்கரைப்பட்டி 3.50 கி.மீ. தொலைவு சாலை மண்சாலை வண்டிப்பாதையாகும். இந்தச் சாலைக்கு இடைப்பட்ட அதாவது மேலராமநதியிலிருந்து மூலக்கரைப்பட்டி வரையிலே போகிற அந்த சாலையில் வேறு எந்த கிராமமும் கிடையாது சாலை அமைக்கப்படவேண்டுமானால் நிலஆர்ஜிதம் எல்லாம் தேவைப்படும். ஆகவே, காலதாமதம் ஆகிவிடும் என்கிற காரணத்தினாலேதான் கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் இதை எடுத்துக் கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலராமநதியிலே ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிற காரணத்தினாலே மூலக்கரைப்பட்டி, அம்மனம்பட்டி, முத்துப்பட்டி, வடுகுப் பட்டி, பெருமாள்தேவன்பட்டி அத்தனையும் இந்த மூலக்கரைப்பட்டி பக்கத்திலே அரை பர்லாங் தூரத்திலேதான் இருக்கிறது. அந்தக் கிராம மக்கள் எல்லாம் இந்த மேலராம நதிக்கு வைத்திய வசதிக்காக வந்து சேரவேண்டிய நிலை அவசியமிருக்கிறது. ஆகவே, அந்தப் பொது மக்கள் முக்கியத் துவத்தைக் கருதி, இந்த சாலையை முதன்மை சலுகை காட்டி, அரசும் அமைச்சரும் இந்த ஆண்டிலேயே அதைச் செயல்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன் ''ஆர்.ஆர்.-ல்' எடுத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

கிருஷ்ணகிரி அணை

* *3890*—டாக்டர். க. காஞ்சனா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரி அணையில் தூர்வாரி, அணையை ஆழப்படுத்தி நீர்ப்பரப்பை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.